


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன் விழுப்புரம் புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள நகராட்சி திடலில் 25 புதிய பேருந்துகளை உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கொடியசைத்து துவக்கி வைத்தார். சிறுபான்மையினர் நலன் அமைச்சர் கே.எஸ்.மஸ்தான், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் சி.பழனி, விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர்கள் விழுப்புரம் டாக்டர். இரா.இலட்சுமணன், விக்கிரவாண்டி அன்னியூர் சிவா, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயசந்திரன், மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், நகரச் செயலாளர் இரா.சக்கரை, பொதுக்குழு பஞ்ச நாதன், நகர மன்றத் தலைவர் தமிழ்செல்வி பிரபு, துணைத் தலைவர் சித்திக் அலி, ஒன்றியச் செயலாளர்கள் க.மும்மூர்த்தி, பி.தெய்வகசிகாமணி, தே.முருகவேல், கல்பட்டு வி.இராஜா, பி.வி.ஆர்.சு.விசுவநாதன், தொ.மு.ச பொதுச் செயலாளர் சேகர், நிர்வாக பணியாளர்கள் சங்க பொதுச்செயலாளர் வாலிபால் மணி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ.தினகரன், ஒன்றிய குழுத் தலைவர்கள் சச்சிதானந்தம், ஓம்சிவசக்திவேல், மாவட்ட பிரதிநிதி சி.எம்.எஸ் முருகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### மாணவச் செல்வங்கள் தன்னம்பிக்கையுடன் –

# விடாமுயற்சியுடன் கல்வி பயின்று வாழ்வில் வெற்றி பெறுவீர்!

## திண்டுக்கல்லில் இலவச மிதிவண்டிகள் வழங்கும் விழாவில் - அமைச்சர் ஐ.பெரியசாமி வாழ்த்துரை!

திண்டுக்கல், ஆக.12

திண்டுக்கல் மாவட்டத்தில் 16,002 மாணவ, மாணவிகளுக்கு ரூ.7.74 கோடி மதிப்பீட்டிலான விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் பணிகளை தொடங்கி வைத்து, மாணாக்கர்கள் தன்னம்பிக்கையுடனும், விடா முயற்சியுடனும் கல்வி பயன்று வாழ்வில் வெற்றி பெற வேண்டும், என அமைச்சர் பெரியசாமி தெரிவித்தார்.



திண்டுக்கல் மாவட்டத்தில் பள்ளிகளில் மேல்நிலை முதலாமாண்டு படிக்கும் 16,002 மாணவ, மாணவிகளுக்கு ரூ.7.74 கோடி மதிப்பீட்டிலான விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் பணிகளை, வி.கூத்தம்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் 10.08.2024 அன்று மாணவ, மாணவிகளுக்கு மிதிவண்டிகளை அமைச்சர் பெரியசாமி, மாவட்ட ஆட்சித்தலைவர் பூங்கொடி, தலைமையில் வழங்கி தொடங்கி வைத்தார்.

இவ்விழாவில், அமைச்சர் ஐ.பெரியசாமி, பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாணவ, மாணவிகளின் கல்வி மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

உயர் கல்வியில் பெண்களின் சேர்க்கையை அதிகரிக்கும் நோக்கத்துடன் அறிமுகப்படுத்தப்பட்ட "புதுமைப்பெண்" திட்டத்தில் திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் 109 கல்லூரிகளில் 5,615 பயனாளிகள் தற்போது வரை பயனடைந்து வருகின்றனர். இத்திட்டம் பெண்களின் உயர் கல்வியில் பெரும் முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதன் தொடர்ச்சியாக உயர்கல்வியில் மாணவர்களின் சேர்க்கை விகிதத்தினை அதிகரிக்கும் பொருட்டு, 'தமிழ்ப்புதல்வன்' எனும் திட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் தமிழ்ப்புதல்வன் திட்டத்தில் மொத்தம் 5,112 மாணவர்கள் பயனடைகின்றனர். ஆத்தூரில் உள்ள கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 1000க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் மாதம் ரூ.1,000 உதவித்தொகை பெற்று பயனடைந்து வருகின்றனர்.

அந்த வகையில் மேல்நிலைக்கல்வி முதலாமாண்டு மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்படுகிறது. திண்டுக்கல் மாவட்டத்தில், 2024-2025-ஆம் கல்வியாண்டில், திண்டுக்கல் கல்வி மாவட்டத்தில் உள்ள 88 பள்ளிகளில் 11ஆம் வகுப்பு பயிலும் 4,975 மாணவர்கள், 5,970 மாணவிகள் என மொத்தம் 10,945 மாணவ, மாணவிகள் மற்றும் பழனி கல்வி மாவட்டத்தில் உள்ள 52 பள்ளிகளில் 11ஆம் வகுப்பு பயிலும் 2,200 மாணவர்கள், 2,857 மாணவிகள், என மொத்தம் 5,057 மாணவ, மாணவிகள் என ஆக மொத்தம் மாவட்டத்தில் 140 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளைச் சேர்ந்த 7,175 மாணவர்கள் மற்றும் 8,827 மாணவிகள் என மொத்தம் 16,002 மாணவ, மாணவிகள் பயன் பெறுகின்றனர்.

7,175 மாணவர்களுக்கு தலா ரூ.4,900 மதிப்பீட்டில் மொத்தம் ரூ.4.32 கோடி மதிப்பீட்டிலும், 8,827 மாணவிகளுக்கு தலா ரூ.4,760 மதிப்பீட்டில் மொத்தம் ரூ.3.42 கோடி மதிப்பீட்டிலும் என ஆக மொத்தம் 16,002 மாணவ, மாணவிகளுக்கு மொத்தம் ரூ.7.74 கோடி மதிப்பீட்டிலான விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்படவுள்ளன.

இன்றைய தினம் வி.கூத்தம்பட்டி, அரசு மேல்நிலைப்பள்ளியில் 11-ஆம் வகுப்பில் பயின்று வரும் 13 மாணவர்கள் மற்றும் 21 மாணவிகள் என 34 மாணவ, மாணவிகளுக்கு முதற்கட்டமாக விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

வாழ்க்கையில் வெற்றி, தோல்வி என்பது நிரந்தரம் இல்லை. மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் அளவிற்கு இடம் பிடிப்பதுதான் நிரந்தரம். அந்த வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மக்களுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

இவ்வாறு அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார்.

இவ்விழாவில், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் பாஸ்கரன், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் மகேஸ்வரி முருகேசன், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியக்குழுத் துணைத்தலைவர் ஹேமலதா மணிகண்டன், திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் சக்திவேல், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் மாரி, மாவட்டக் கல்வி அலுவலர்(பொ) சண்முகவேல், ஆத்தூர் வட்டாட்சியர் வடிவேல் முருகன், ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர் செல்வி, வீரக்கல் ஊராட்சி மன்ற தலைவர் இராஜேஸ்வரி, அரசுத்துறை அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# தருமபுரி மேற்கு மாவட்டக் கழகக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் பி.பழனியப்பன் அறிக்கை!

தருமபுரி. ஆக. 12-

தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்நாளைநடைபெறுகிறது என மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

தருமபுரி மேற்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டம் நாளை (13.08.2024 - செவ்வாய்க்கிழமை) காரிமங்கலம், மாவட்ட கழக அலுவலகத்தில் காலை 10.30 மணியளவில் மாவட்ட கழக அவைத்தலைவர் கே.மனோகரன், தலைமையிலும், தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர், மாவட்டக் கழக துணைச் செயலாளர் ஆ. மணி, முன்னிலையிலும் நடைபெறும். அதுசமயம், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகளும், தலைமைச் செயற்குழு உறுப்பினர்களும், பொதுக்குழு உறுப்பினர்களும், ஒன்றிய கழக செயலாளர்களும், பேரூர் கழக செயலாளர்களும், மற்றும் சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்களும் அனைவரும் தவறாமல் கலந்துக்கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.



பொருள்: 2026ல் நடைபெறும் சட்டமன்ற பொது தேர்தலையொட்டி செய்ய வேண்டிய பணிகள். இல்லந்தோறும் இளைஞரணி உறுப்பினர் சேர்க்கை மற்றும் மகளிரணி உறுப்பினர் சேர்க்கை தொடர்பாக. கழக வளர்ச்சி பணிகள் குறித்தும்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




சேலத்தில் கலைஞர் தொலைக்காட்சியின் பள்ளிகளுக்கு இடையே தமிழ் விளையாட்டு நிகழ்ச்சி செசன். 2 தொடக்கவிழாவை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கிவைத்து முதல் செசனில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினார். உடன் தமிழ்நாடு பாட நூல் மற்றும் கல்வியியல் கழகத் தலைவர் திண்டுக்கல் லியோனி, மாவட்ட கழக செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ., நிகழ்ச்சி அமைப்பாளர். ஜேம்ஸ் வசந்தன் ஆகியோர் இருந்தனர்.



சேலம், பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள போஸ் மைதானத்தில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு மற்றும் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் அரசுப் பொருட்காட்சியினை 09.08.2024 அன்று திறந்து வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி,மாநகராட்சி மேயர் ஆ. இராமச்சந்திரன், சேலம் வடக்கு சட்ட மன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள், மாநகராட்சி ஆணையாளர் ரஞ்ஜீத் சிங், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு.லலித் ஆதித்ய நீலம், மாநகராட்சி துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

### தாயுள்ளத்துடன் ஒரு தந்தையின் நிலையில் இருந்து

# தமிழ்நாட்டிற்கு ஒவ்வொரு திட்டங்களையும் தீட்டி வருகிறார் முதல்வர்!

## தருமபுரி மாவட்டத்தில் "தமிழ்ப் புதல்வன்" திட்டத்தை துவக்கி வைத்து - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பேச்சு!

தருமபுரி ஆக 12-

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் கீழ், தருமபுரி மாவட்டத்தில் 68 கல்லூரிகளில் பயிலும், 7,033 மாணவர்களுக்கு மாதாந்திர உதவித் தொகை ரூபாய் 1000/-க்கான பற்று அட்டைகளை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் வழங்கினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பொற்கரங்களால் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிறுவனத்தின் நிதி உதவியுடன் ரூபாய் 1928 கோடி மதிப்பீட்டில் முதற்கட்டமாக தொடங்கிவைக்கப்பட்ட ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம் மூலம் தருமபுரி மாவட்டத்தில் 2784 குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

அவர்வழியில் நல்லாட்சி செலுத்தும் தமிழக முதலமைச்சர் அவர்கள் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் 2ம் கட்டம் ரூபாய் 7 ஆயிரத்து 890 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் என அறிவித்து, இதற்கான விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மூலம் தருமபுரி மாவட்டத்திலுள்ள 2828 ஊரகக் குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட உள்ளது. முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மாணவ, மாணவியர்களுக்கு இலவச பேருந்து பயணச்சலுகைகள் வழங்கும் திட்டத்தை செயல்படுத்தினார். இதன் மூலம் இன்றும் மாணவ, மாணவியர்கள் பயன்பெற்று வருகின்றனர். நமது முதலைமைச்சர் இது போன்ற சிறப்பான திட்டங்களை நாட்டிறவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கி. சாந்தி, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்.

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விழா பேரூரை ஆற்றிய போது தெரிவித்ததாவது:



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கல்வியறிவும் பொருளாதார சுதந்திரமும் பெண்களின் முன்னேற்றத் திற்கு மிக முக்கியம் என்பதை உணர்ந்து, அரசுப்பள்ளிகளில் பயிலும் மாணவிகளின் உயர்க் கல்வி சேர்க்கை மிகக்குறைவாக இருப்பதை கருத்தில் கொண்டும் அரசு பள்ளிகளில் 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை பயின்று, உயர்கல்வி பயிலும் அனைத்து மாணவிகளுக்கும் மாதம் ரூபாய் ஆயிரம் அவர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக வழங்கும் "புதுமைப் பெண் திட்டத்தை கடந்த 5.9.2022 அன்று துவக்கி வைத்தார்.புதுமைப்பெண் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் உள்ள கலை, அறிவியல், பொறியியல், தொழிற்படிப்பு, மருத்துவ கல்லூரிகளில் பயிலும் சுமார் 3.28 இலட்சம் மாணவிகள் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்தினால் மாணவிகள் உயர்கல்வியில் சேரும் எண்ணிக்கை 34 சதவீதம் உயர்ந்துள்ளது. புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் தருமபுரி மாவட்டத்தில் 16,842 மாணவிகள் பயனடைந்துள்ளனர்.தமிழ்நாட்டில் பெண்களின் உயர்கல்வியை உறுதி செய்வதற்கென தொடங்கப்பட்ட புதுமைப் பெண் திட்டமானது மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளதையடுத்து, 2024-2025 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், பெண்களின் சேர்க்கையை அதிகரிக்கும் நோக்கத்துடன் அறிமுகப்படுத்தப்பட்ட "மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் புதுமைப் பெண் திட்டம்" பெண்களின் உயர் கல்வியில் பெரும் முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது போல், அரசு பள்ளிகளில் பயின்ற, ஏழை எளிய மாணவர்களை சாதனையாளர்களாக உருவாக்கிடவும், அரசுப் பள்ளி மாணவர்களின் உயர்கல்வி சேர்க்கையை உயர்த்திடவும், "தமிழ்ப் புதல்வன்" எனும் மாபெரும் திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 6 முதல் 12-ஆம் வகுப்பு வரை அரசு பள்ளிகளில் பயின்று மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்று உயர்கல்வி சேரும் மாணவர்கள், பாடப் புத்தகங்கள், பொது அறிவு நூல்கள் மற்றும் இதழ்களை வாங்கி அவர்களது கல்வியை மெருகேற்றிட உதவும் வகையில், மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் அவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படும் எனவும் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.இதனைதொடர்ந்து, தமிழ்ப்புதல்வன் திட்டத்தை தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள் (09.08.2024) அன்று கோயம்புத்தூர் மாவட்டத்தில் துவக்கி வைத்துள்ளார்.

தருமபுரி மாவட்டத்தில் இத்திட்டம் பாப்பிரெட்டிபட்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் துவக்கி வைக்கப்படுகிறது. தருமபுரி மாவட்டத்தில் தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் கீழ் 68 கல்லூரிகளில் உயர்கல்வி பயிலும், 7033 மாணவர்களுக்கு மாதம் ரூபாய் ஆயிரம் நிதி உதவி வழங்கும் விதமாக, இவ்விழாவில் 358 மாணவர்களுக்கு இன்றைய தினம் வழங்கப்பட்டுள்ளது.உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் ஆயிரம் ரூபாய் நிதி உதவி என்பது மிகச்சிறந்த உதவித்தொகையாகும். மாணவர்களுக்கான எதிர்கால வாழ்விற்கான ஒரு முதலீடாக இருக்க வேண்டும் என்று இத்திட்டத்தினை தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி உள்ளார்.இந்நிதி உதவியை மாணவர்கள் சேமிப்பாக வைத்து, மேலும் உயர்கல்விக்கு பயன்படுத்தி கொள்ள வேண்டும். புத்தகங்கள் வாங்குவது, கல்வி சார்ந்த விஷயங்களுக்கு மட்டுமே பயன்படுத்தி தங்களின் உயர்கல்விக்கு உத்திரவாதமாக இந்நிதியை பயன்படுத்த வேண்டும். அறிவு சார்ந்த சமுதாயமாக தாம் உருவாகுவதற்கு இந்நிதியை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்நிதியை கொண்டு ஏதேனும் போட்டித் தேர்வுகளுக்கு தேவையான நல்ல புத்தகங்களை வாங்கி படிக்கலாம். உங்களுக்கு ஒரு வெல்கம் கிட் கொடுக்கப்பட்டுள்ளது. அதில் வழிகாட்டுதல் கையேடும், பொருளாதாரம் சம்பந்தமான குறிப்புகளுடன் கூடிய புத்தகமும் உள்ளது. இவற்றை நீங்கள் முழுமையாக படித்து பயன்பெற வேண்டும்.மாணவர்கள் சிறந்த கல்வியை கற்றால் அவர்கள் சுயமாக தொழில் செய்து முன்னேறுவதற்கு நல்ல வாய்ப்பாகவும், வேலைவாய்ப்பு பெறவும் உறுதுணையாக அமையும். மாணவர்கள் தங்களின் வாழ்வின் முன்னேற்றத் திற்கு தேவையான ஆக்கப்பூர்வமான சிந்தனைகளை உருவாக்கி கொள்ள வேண்டும். நீங்கள் மனது வைத்தால் எதையும் சாதிக்கலாம். எளிதில் வெற்றி அடையலாம்.மேலும், தருமபுரி மாவட்டத்தில் கு அளித்து ஒரு பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு செய்ய வேண்டிய அனைத்தையும் செய்து, தாயுள்ளதுடன்,ஒரு தந்தையாகவும் செயல்பட்டு நாட்டின் வளர்ச்சியில் இந்தியாவின் மற்ற மாநிலங்களை விட சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றி இருக்கிறார்.இன்று,தருமபுரி மாவட்ட மாணவர்கள் தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் கீழ் மாதந்தோறும் வழங்கப்படும் ரூபாய் 1000 நிதி உதவியினை உயர்கல்விக்கு உத்திரவாதமாக நீங்கள் பயன்படுத்தி கொண்டு, உயர்ந்த இடத்தை அனைவரும் எட்ட வேண்டும், உயர் கல்வி என்பதை உங்கள் இலக்காக கொண்டு வாழ்வில் வெற்றியடைய வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் செ. பால்பிரின்ஸ்லி ராஜ்குமார், முன்னாள் அமைச்சர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் பி.பழனியப்பன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி, முன்னாள் மாவட்ட கழக செயலாளர்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.என்.பி.இன்பசேகரன், மேற்கு மாவட்ட அவைத்தலைவர் மனோகரன், மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.ஜோதி சந்திரா, மாவட்ட சமூக அலுவலர் திருமதி.ச. பவித்ரா, வருவாய் கோட்டாட்சியர் வில்சன் ராஜசேகர், கல்லூரி கல்வி மண்டல இணை இயக்குநர் திருமதி.பா.சிந்தியா செல்வி, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் ராமஜெயம்,ஒன்றிய குழு தலைவர் திருமதி.உண்ணாமலை குணசேகரன், வட்டாட்சியர் திருமதி. வள்ளி,கல்லூரி முதல்வர் ரவி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள்,உள்ளாட்சி பிரதிநிதிகள், கல்லூரி மாணவர்கள், பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.




ஈரோடு மாவட்டம் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11ம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதி வண்டிகளை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி வழங்கினார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் வி.செல்வராஜ், மாவட்ட ஊராட்சி தலைவர் நவமணி, மாவட்ட ஊராட்சி துணை தலைவர் கஸ்தூரி உள்ளிட்ட பலர் உள்ளனர்.